செய்தி வெளியீடு எண். 218 நாள்: 20.04.2018

**<u>கடலோர பகுதிகளில் கடல் அலை சீற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்</u>**

கடல் சீற்றத்தின் காரணமாக திருவள்ளூர் மாவட்டத்தில் கடலோரத்தில் உள்ள தாழ்வான பகுதிகளில் 21.04.2018ம் தேதி (சனிக்கிழமை) காலை 08.30 மணி முதல் 22.04.2018ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) இரவு 11.30 மணி வரையில் 18 முதல் 22 விநாடிகள் இடைவெளியில் 2.5- 3.5 மீட்டர் (அதாவது 8.25 அடி —— 11.50 அடி) உயரத்திற்கு கடல் அலைகள் எழுந்து சீற்றத்துடன் காணப்படும் என்றும், 24.04.2018ம் தேதி (செவ்வாய்கிழமை) வரை தொடர்ச்சியாக இச்சீற்றம் காணப்பட்டு, பின்னரே குறையக் கூடும் என்றும் இந்திய கடல்சார் தகவல் மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. எனவே, மீனவர்கள் மற்றும் கடலோரப் பகுதிகளில் உள்ள மக்கள் கீழ்க்கண்ட அறிவுரைகளை கட்டாயமாக பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கடல் சீற்றத்தின் காரணமாக, கடற்கரை பகுதிகள் இதன் தாக்கத்தை பெரிதும் உணரும், எனவே, கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் பொதுமக்கள் யாரும் அருகில் செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்படுகிறது. படகுகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டு சேதமடைவதை தவிர்க்கும் பொருட்டு படகுகளை போதிய இடைவெளியில் நங்கூரமிட்டு நிறுத்தி வைக்குமாறு கோரப்படுகிறது.

மேற்கண்ட நாட்களில் கடற்கரைப் பகுதிகளில், பொதுமக்கள் எவரும் பொழுதுபோக்கு விளையாட்டுகளிலும், வேடிக்கை பார்க்கும் நோக்கிலும் ஈடுபட வேண்டாம் என எச்சரிக்கப்படுகிறது. எந்த காரணம் கொண்டும், கடற்கரையிலிருந்து கடலுக்குள் படகுகளில் செல்ல வேண்டாம் எனவும், கடலிலிருந்து கடற்கரைக்கு படகுகளை கொண்டு வர வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

வருவாய், உள்ளாட்சி, காவல், சுகாதாரம், தீயணைப்பு மற்றும் மீன்வளம் ஆகிய துறையினரால் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**